



## மாநகராட்சியான திருவண்ணாமலையின் வளர்ச்சிக்கு,

# ‘திராவிட மாடல்’ அரசு என்றைக்கும் துணை நிற்கும்!

## மேயருக்கு – செங்கோல், அங்கி மற்றும் தங்கச்சங்கிலி வழங்கி

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

***திருவண்ணாமலை, ஜூலை 15 -***

***திருவண்ணாமலை மக்களின் பல நாள் கோரிக்கையை நிறைவேற்றும்விதமாக, முதலமைச்சர் அவர்கள் திருவண்ணாமலையை மாநகராட்சியாக தரம் உயர்த்தினார். திருவண்ணாமலை மாநகராட்சி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், மாநகராட்சியின் முதல் மேயர் நிர்மலா வேல்மாறன் அவர்களுக்கு மேயருக்கான செங்கோல், அங்கி மற்றும் தங்கச்சங்கிலியை நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்தினார்.***

இதைத் தொடர்ந்து மாநகராட்சி துணை மேயர் ராஜாங்கம் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கு நினைவுப்பரிசை வழங்கியதுடன், மாநகராட்சி தூய்மைப் பணிக்கான வாகனங்களின் பயன்பாட்டைக் கொடியசைத்து தொடங்கி வைத்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ‘திருவண்ணாமலை மாநகராட்சி மக்கள் பணியில் சிறக்கட்டும்’ என்று வாழ்த்திப் பேசினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரையின் விவரம் வருமாறு:

திருவண்ணாமலை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதைக் கொண்டாடுகின்ற வகையில், சிறப்பாக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1896-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் காலத்தில், நகராட்சியாக அறிவிக்கப்பட்ட திருவண்ணாமலை, கிட்டத்தட்ட 129 ஆண்டுகளுக்குப் பிறகு நமது முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு மாநகராட்சியாக தரம் உயர்த்திக் கொடுத்து இருக்கிறார்கள்.

1974-ஆம் ஆண்டு, நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் இதனை தேர்வு நிலை நகராட்சி என்று தரம் உயர்த்தினார்கள். அதைத் தொடர்ந்து 1998-இல் மீண்டும் கழக அரசு அமைந்தபோது திருவண்ணாமலை முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அதன்பிறகு 2008-இல் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் திருவண்ணாமலையை சிறப்புநிலை நகராட்சியா உயர்த்திக் கொடுத்தார்கள். இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் திருவண்ணாமலையை மாநகராட்சியாக உயர்த்தி இருக்கிறார்கள்.

### வரலாற்றுச் சிறப்புமிக்க விழா

இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விழாவில் பங்கேற்கின்ற வாய்ப்பைத் தந்த அமைச்சர் அண்ணன் வேலு அவர்களுக்கும், திருவண்ணாமலை மாநகராட்சிக்கும் எனது நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, நமது மாண்புமிகு மேயர் சகோதரி நிர்மலா வேல்மாறன் அவர்களுக்கு, இன்றைக்கு மேயருக்கான செங்கோல், அங்கி, தங்க சங்கிலி ஆகியவற்றை உங்கள் சார்பாக, மக்களின் சார்பாக நான் அணிவித்து இருக்கிறேன். அவருக்கும், துணை மேயர் சகோதரர் ராஜாங்கத்திற்கும், வந்திருக்கின்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



### பெண்களுக்கான ஆட்சி

இங்கு இன்னொரு சிறப்பு என்னவென்றால், பெண் மாமன்ற உறுப்பினர்கள் ஆண் மாமன்ற உறுப்பினர்களை விட அதிகம். ஆண் மாமன்ற உறுப்பினர்கள் 16 பேர், பெண் மாமன்ற உறுப்பினர்கள் 23 பேர். இந்த விழாவில்கூட ஆண்களை விட, பெண்கள்தான் அதிக அளவில் பங்கேற்று இருக்கிறீர்கள். வாக்காளர் பட்டியலிலும் இப்பொழுது நீங்கள்தான் அதிகமாக இருக்கிறீர்கள். எந்த திருமணத்திற்குச் சென்றாலும் நீங்கள்தான் அதிகமாக இருக்கிறீர்கள். இது ஒன்றே ஒன்றை மட்டும்தான் காட்டுகிறது. இங்கு நடந்து கொண்டிருக்கின்ற நம் முதலமைச்சர் தலைமையிலான ஆட்சி பெண்களுக்கான ஆட்சி என்பதைக் காட்டுகிறது.

நம் தலைவர் அவர்கள் பல வருடங்கள் சென்னையின் மேயராக பணியாற்றினார். இப்பொழுது சென்னைக்கு சென்று மேயர் யார் என்று கேட்டீர்கள் என்றால், நிறைய பேர் முதலமைச்சரின் பெயரைத்தான் சொல்வார்கள். அது ஒரு பொற்காலமாக இருந்தது. சென்னைக்குத் தேவையான ஒவ்வொன்றையும், நம் தலைவர் அவர்கள் பார்த்து பார்த்து செய்த காலம் அது.

எப்படி அவர் மக்கள் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, சென்னையின் வளர்ச்சிக்காக தொடர்ந்து பாடுபட்டாரோ, வந்திருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள், மேயர்கள், துணை மேயர்கள் நீங்கள் அத்தனைபேரும் மக்கள் பணியில் உங்களை ஈடுபடுத்திக் கொண்டு உழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### நீண்டநாள் கோரிக்கை– கனவு

நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளின் வளர்ச்சிக்கும் உழைத்து வருகிறார்கள். திட்டங்களை தீட்டி வருகிறார்கள். தகுதி வாய்ந்த ஊர்களை எல்லாம் மாநகராட்சியாக அறிவித்து, அந்த ஊரின் வளர்ச்சிக்கு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து துணை நின்று வருகிறார்கள். அந்த வகையில்தான் கடந்த ஆகஸ்ட் மாதம் தமிழ்நாட்டின் 22-வது மாநகராட்சியாக திருவண்ணாமலை தேர்ந்தெடுக்கப்பட்டு, உருவாக்கப்பட்டது. இது உங்களின் நீண்டநாள் கோரிக்கை, கனவு. அதை நம் முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் அரசு இன்று உண்மையாக்கி இருக்கிறது.

திருவண்ணாமலை என்பது இன்றைக்கு சர்வதேச அளவில், முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாநகரம். ஆன்மிகமாக இருக்கட்டும், சுற்றுலாப் பயணமாக இருக்கட்டும், திருவண்ணாமலைக்கு எல்லா மாநிலங்களில் இருந்தும், இன்னும் சொல்லப்போனால் வெளிநாடுகளில் இருந்தும் நிறைய பேர் வந்து செல்கிறார்கள். இங்கு வருகின்ற மக்கள் எல்லாம், திருவண்ணாமலை மாநகராட்சியின் செயல்பாட்டைப் பார்த்து மகிழ வேண்டும்.

குடிநீராக, சுகாதாரம், கழிப்பிட வசதி, நிழற்குடைகள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் என அனைத்து வசதிகளும் தரமாக இருக்க வேண்டும். திருவண்ணாமலை நகராட்சியாக இருந்த பொழுது எப்படி இருந்தது, இன்றைக்கு மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு எப்படி ஆகியிருக்கிறது என்ற வித்தியாசத்தை மக்கள் கண்கூடாகப் பார்க்க வேண்டும். அதற்கு நீங்கள்தான் பொறுப்பு.

திருவண்ணாமலையின் வளர்ச்சிக்காக கடந்த நான்கு ஆண்டுகளில் நமது அரசு எத்தனையோ திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. அண்ணன் எ.வ.வேலு அவர்கள் தொடர்ந்து முதலமைச்சரிடம் அழுத்தம் கொடுத்து, வேண்டுகோள் வைத்து பல திட்டங்களைஇன்றைக்குதிருவண்ணாமலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

### புதிய பேருந்து நிலையம்

40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம், 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய காய்கறி சந்தை, 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாட வீதிகளில் கான்கிரீட் சாலை என்று பல சாதனைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். அதுமட்டுமல்ல, திருவண்ணாமலையின் உட்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் இங்கு செயல்படுத்தப்பட இருக்கிறது. 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எல்லா வீடுகளுக்கும் குடிநீரைக் கொண்டு போய் சேர்க்கும் வகையில் குழாய்களும், பதிக்கப்பட உள்ளன. இன்னும் பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை மாநகராட்சிக்குத் தொடர்ந்து கொடுப்பார்.

மேயருக்கான செங்கோலைப் பெற்றுள்ள சகோதரி நிர்மலா வேல்மாறன், இந்த மாநகராட்சியின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு அனைவரையும் அரவணைத்துச் செயல்பட வேண்டும் என்று உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எப்பொழுதெல்லாம் கழக அரசு அமைகிறதோ, அப்போதெல்லாம் திருவண்ணாமலையின் வளர்ச்சிக்கு நமது அரசு அடித்தளமிட்டு வருகிறது. திருவண்ணாமலையின் வளர்ச்சிக்கு, திராவிட மாடல் அரசு என்றைக்கும் துணை நிற்கும் என்று மீண்டும் ஒருமுறை தெரிவித்து, வந்திருக்கின்ற உங்கள் அத்தனை பேருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டு, உங்களின் மக்கள் பணி சிறப்பாக அமைய வேண்டும் என்று கூறிக் கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவையின் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் ராஜாங்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் தர்ப்பகராஜ் ஐ.ஏ.எஸ்., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுதாகர் ஐ.பி.எஸ், மாநகர ஆணையர் செல்வபாலாஜி, மாவட்ட வருவாய் அலுவலர் ராம் பிரதீபன், மருத்துவர் கம்பன், ஸ்ரீதரன், பிரபு உள்பட அரசு அதிகாரிகள் அலுவலர்கள் மற்றும் கழக முன்னணியினர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.7.2025) திருவண்ணாமலை மாநகராட்சி சமுத்திரம் பகுதியில், திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர், மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் ஆகியோரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு அரங்கத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், , துணை மேயர் சு. ராஜாங்கம், மாநகராட்சி ஆணையாளர் ச.செல்வபாலாஜி உள்பட மாமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.7.2025) திருவண்ணாமலை மாநகராட்சி சமுத்திரம் பகுதியில், திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர், மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் ஆகியோரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு அரங்கத்தை திறந்து வைத்து, 98.83 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், துணை மேயர் க. ராஜாங்கம், மாநகராட்சி ஆணையாளர் ச.செல்வபாலாஜி உள்பட மாமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை மாவட்டம் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சியில் நேற்று முன்தினம் (13.7.2025) நடைபெற்ற தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள் குறித்த கலந்துரையாடல் கூட்டத்தின்போது துணை முதலமைச்சர் .உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் மகளிர் சுய உதவிக்குழுவினர் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.7.2025) திருவண்ணாமலை மாவட்டம் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சியில், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் குழுவின் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினார். இந்த கூட்டத்தில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் மருத்துவர் ச.உமா, மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.